# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.),
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

8074753

C

1. District : Dindigul
மாவட்டம்
PS: V&AC
காவல்நிலையம்
Year: 2021
ஆண்டு
FIR No.: 4/21
மு.த.அ. எண்
Date: 12.08.21
நாள்

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption Act 1988 as amended in 2018
Sections பிரிவுகள்: 7, 7(A)
(ii) Act சட்டம்:
Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்:
Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day :
குற்ற நிகழ்வு நாள்
Date from :
நாள் முதல்
Date to : 07.08.21 at 11.00 hrs பலக்கனூத்து பஸ் ஸ்டாப் அருகே நாயகி பேக்கரி முன்பு
நாள் வரை

Time Period :
நேர அளவு
Time from :
நேரம் முதல்
Time to : 11.08.21 at 19.30 hrs செம்பட்டி பழனி ரோடு 23ம் மைல் முன்பு
நேரம் வரை

(b) Information Received at PS. Date :
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 12.08.21
Time : 08.00 hrs
நேரம்

(c) General Diary Reference : Entry No(s)
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 12.08.21
Time : 09.30 hrs
நேரம்

4. Type of Information : Written/ Oral :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: பலக்கனூத்து சுமார் 20 km மேற்கு
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்

Beat Number :
முறைக் காவல் எண்
(b) Address : பலக்கனூத்து ஊராட்சி அலுவலகம் திண்டுக்கல் மாவட்டம்
முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்
District :
மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : M. பாலகார்த்திக்
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர்
(b) Father's/ Husband's Name : B. முருகன்
தந்தை / கணவர் பெயர்

(c) Date / Year of Birth : 26/21
நாள் / பிறந்த ஆண்டு
(d) Nationality : இந்தியன்
நாட்டினம்
(e) Passport No. :
வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue :
வழங்கப்பட்ட நாள்
Place of Issue :
வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : விவசாயம்
தொழில்
(g) Address : கணபதி நகர், [illegible], திண்டுக்கல்
முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

1) திரு. லிங்கசாமி, ஊராட்சி செயலாளர், பலக்கனூத்து ஊராட்சி, திண்டுக்கல் மாவட்டம்
2) திரு. இராமசாமி ஊராட்சி மன்ற தலைவரின் கணவர், பலக்கனூத்து ஊராட்சி, திண்டுக்கல்

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : -
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: -
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..................... Rank ..................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ........................... பதவி ..................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

12/08/2021 12/08/21

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
12.08.21 at 12.15 hrs.

Name: பெயர் ஜெ. பொ கீதா ராணி
Rank: நிலை .....................No. எண் .........
காவல் ஆய்வாளர்
வ.கு.க. பிரிவு,
திண்டுக்கல்.

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p 2

**திண்டுக்கல் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு கு.எண்:4/2021 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி:-**

## Column No.12. FIR Contents

**பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது:** திண்டுக்கல், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, காவல் ஆய்வாளர் ஆகிய நான் இன்று 12.08.2021-ம் தேதி காலை 08.00 மணிக்கு நிலையத்தில் இருந்தபோது திண்டுக்கல் மாவட்டம். புதுச்சத்திரம் போஸ்ட், கணபதிநகர், B.முருகன் மகன் M.பாலகார்த்திக் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்துமூலமான புகாரை காவல் துணைக்கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு, திண்டுக்கல் அவர்கள் பெற்று ஒப்புதல் செய்து கொடுத்த புகாரை நான் காலை 08.15 மணிக்கு பெற்று கீழ்கண்டவாறு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படுகிறது. புகாரின் விபரம் பின்வருமாறு: அனுப்புநர்: M.பாலகார்த்திக், வயது 26/2021, S/o. B.முருகன், கணபதி நகர், புதுச்சத்திரம் போஸ்ட், திண்டுக்கல்-624 619 பெறுநர்: உயர்திரு.காவல் துணைக்கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திண்டுக்கல். அய்யா, நான் மேற்கண்ட முகவரியில் எனது குடும்பத்துடன் குடியிருந்து கொண்டு விவசாயம் செய்து வருகின்றேன். நான் B.E படித்துள்ளேன். நானும் லக்கையன்கோட்டை கிராமத்தை சேர்ந்த திரு.செல்வராஜ் அவர்களின் மனைவி திருமதி.ஈஸ்வரி என்பவரும் சேர்ந்து ரெட்டியார்சத்திரம் ஊராட்சி ஒன்றியம், பலக்கனூத்து ஊராட்சி மற்றும் பலக்கனூத்து கிராம சர்வே எண் 779/4ல் 1.41 ஏக்கர் புன்செய் நிலத்தை விலைக்கு வாங்கினோம். அது ஒட்டன்சத்திரம் சார் பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண் 514/2019, நாள்.04.03.2019 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. நாங்கள் இருவரும் மேற்படி நிலத்தை வாங்கும்போது தரிசு நிலமாக இருந்தது. பின்பு மேற்படி நிலத்தை 1 முதல் 24 பிளாட்களாக பிரித்து விற்பனை செய்ய திட்டமிட்டு எங்கள் இருவர் பெயரிலும் விண்ணப்பம், லே அவுட் வரைபடம் மற்றும் ஆவணங்களுடன் உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், திண்டுக்கல் அலுவலகத்தில் கடந்த 27.02.2021ம் தேதி விண்ணப்பித்தோம். அதன் பிறகு நானும் எனது தாய்மாமா விஜயகண்ணனும், திருமதி.ஈஸ்வரியின் கணவர் செல்வராஜும் நகர் ஊரமைப்பு அலுவலகத்தில் பிளாட்கள் லே அவுட் ஒப்புதல் பெறுவதற்காக அலைந்தோம். அதன் மேல் உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகத்தில் அனைத்து நடைமுறைகளையும் பின்பற்றிய பிறகு பலக்கனூத்து ஊராட்சிக்கு பொதுப்பாதை மற்றும் கழிவு நீர் ஓடைகளுக்காகவும், மின்சார பாதைக்காக மின்சாரதுறைக்கும் இடம் ஒதுக்கி பத்திரம் பதியவேண்டும் என்று

20.04.2021 தேதியிட்டு கடிதம் அனுப்பியிருந்தார்கள். அதன்பேரில் மேற்படி லே அவுட்டில் சுமார் 1361.75 ச.மீ காலியிடமும் மற்றும் TANGEDCO க்கு சுமார் 25.15 ச.மீ காலியிடமும் தானமாக கொடுப்பதற்காக ஒட்டன்சத்திரம் சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண்கள் முறையே 1123/2021 மற்றும் 1122/2021, நாள் 04.05.2021 ம் தேதி பதிவு செய்யப்பட்டது. அவ்வாறு பதிவு செய்யப்பட்ட ஆவணங்களின் நகல்களை உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், திண்டுக்கல் அலுவலகத்தில் கொடுத்தோம். அதன்படி மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலக கடிதம் ந.க.எண் 712/2021/தி.மா, நாள்.24.06.2021ன்படி தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டது. அந்தக் கடிதத்துடன் பிளாட்டுகள் விற்பனை செய்வதற்கு தடையில்லா சான்று பெறுவதற்காக பலக்கனூத்து ஊராட்சி அலுவலகத்திற்கு கொடுக்க வேண்டிய தபாலை நானும் எனது தாய்மாமா விஜயகண்ணன் உடன் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகத்தில் இருந்து பெற்று 28.06.2021ம் தேதி பலக்கனூத்து ஊராட்சி அலுவலகத்தில் சென்று ஊராட்சி செயலாளர் திரு.லிங்கசாமி வசம் கொடுத்தோம். அப்போது செயலாளர் லிங்கசாமி தடையில்லா சான்று கொடுப்பது சம்பந்தமாக தலைவரிடம் பேசிக்கொள்ளுங்கள் என்று கூறினார். அதன் பின்பு 02.07.2021ம் தேதி காலை சுமார் 10.30 மணியளவில் நானும் எனது தாய்மாமா விஜயகண்ணன் மற்றும் ஈஸ்வரியின் கணவர் செல்வராஜும் தலைவரை சந்திக்க பலக்கனூத்து ஊராட்சி அலுவலகத்திற்கு சென்ற போது ஊராட்சி செயலாளரும், ஊராட்சி மன்ற தலைவர் இருக்கையில் ஊராட்சிமன்ற தலைவரின் கணவர் திரு.ராமசாமி என்பவரும் இருந்தார்கள். நான் அவர்களிடம் தடையில்லா சான்று வழங்குவது சம்பந்தமாக தலைவரை சந்திக்க வந்திருப்பதாக சொன்னேன். அதற்கு ஊராட்சி செயலாளர் அவர்கள் தலைவரின் கணவர் இவர் தான். இவர் சொன்னால் தலைவர் கேட்டுக்கொள்வார். எதுவாக இருந்தாலும் இவரிடமே பேசிக் கொள்ளுங்கள் என்று கூறினார். அதற்கு ராமசாமி அவர்களும் நான் தான் இங்கு அனைத்து பணிகளையும் கவனித்து வருகிறேன் என்றும், நான் சொன்னால் தான் எனது மனைவி செல்வராணி எந்த பேப்பரிலும் கையெழுத்து போடுவார் என்றும், தலைவரை நீங்கள் சந்திக்க வேண்டிய அவசியம் இல்லை என்றும் சொன்னார். பின்பு நானும் அவரிடம் இந்த பிளாட்களை விற்பதற்கு தடையில்லா சான்று வாங்கிக்கொடுங்கள் என்று கேட்டேன். தடையில்லா சான்று வழங்குவதற்கு கொஞ்ச பணம் செலவாகும் என்று சொன்னார். நான் எவ்வளவு பணம் செலவாகும் என்று கேட்டேன். அதற்கு அவர் செயலாளர் லிங்கசாமியிடம் சொல்லிவிடுகிறேன், அவரிடம் கேட்டு தெரிந்து

கொள்ளுங்கள் என்று கூறினார். பின்பு பலமுறை நான் லிங்கசாமியை சந்தித்து தடையில்லா சான்று சம்பந்தமாக பேசிய போது நான் தலைவரின் கணவரிடம் கேட்டு சொல்கிறேன் என்று சொல்லி என்னை அலையவிட்டார். அதன் பின்பு நான் எனது மாமா விஜயகண்ணன் மற்றும் திருமதி.ஈஸ்வரி அவர்களின் கணவர் செல்வராஜ் அவர்களும் 07.08.2021ம் தேதி காலை சுமார் 11.00 மணிக்கு ஊராட்சி அலுவலகம் சென்று செயலாளர் லிங்கசாமியை பார்க்க சென்ற போது பலக்கனூத்து பஸ்டாப் அருகிலிருக்கும் ராயல் பேக்கரி முன்பு திரு.லிங்கசாமி நின்றிருந்தார். அப்போது நான் அவரிடம் தடையில்லா சான்று சம்பந்தமாக கேட்ட போது தலைவரின் கணவர் ரூபாய் 50,000/- செலவாகும் என்று கூறியதாக தெரிவித்தார். நான் இவ்வளவு பணம் அரசாங்கத்திற்கு கட்ட வேண்டுமா என்று கேட்டேன். அதற்கு அவர் அரசாங்க கட்டணம் இல்லை, நீங்கள் விபரம் புரியாத ஆளாய் இருக்கீங்க, இது எங்கள் செலவுக்கு கொடுப்பது, எல்லாம் பொதுவான நடைமுறை தான் என்று சொன்னார். நான் அதற்கு நாங்களே ரொம்ப கஷ்டப்பட்டு இடத்தை வாங்கி பிளாட் போட்டிருக்கோம் என்று சொன்னேன். அதற்கு அவர் நாங்க கேட்ட தொகையை கொடுத்தால் வேலை நடக்கும், இல்லையென்றால் வேலை நடக்காது என்று சொன்னார். இந்த பணத்தில் ஏதாவது குறைக்க முடியுமா என்று கேட்டேன். அதற்கு அவர் சரி ரூ.10,000/- த்தை குறைத்து ரூ.40,000/- கொடுங்கள், நான் தலைவரின் கணவரிடம் உங்களுக்காக பேசிக் கொள்கிறேன் என்று கூறினார். அதற்கு பிறகு நாங்கள் பணத்தை ரெடி பண்ணி கொண்டு வருகிறோம் என்று சொல்லி விட்டு வந்து விட்டோம். பின்பு நான் எனது மாமாவை அழைத்து கொண்டு 11.08.2021ம் தேதி இரவு சுமார் 07.30 மணிக்கு செம்மடைப்பட்டியில் இருக்கும் பழனிமுருகன் உரக்கடை முன்பு தலைவரின் கணவர் ராமசாமியை சந்தித்து, செயலாளர் ரூ.40,000/- கேட்பதாக சொன்னேன். அதற்கு அவர் அதைத்தான் லிங்கசாமிகிட்ட சொல்லியிருந்தேன். அவர் சொன்னபடி பார்த்து கொடுங்கள் என்று சொன்னார். இல்லையென்றால் நீங்கள் அலைய வேண்டியது தான் என்றும் கறாராக கூறினார். மேலும் தான் லிங்கசாமி மூலம் கேட்ட பணம் ரூ.40,000/-த்துடன் நாளை 12.08.2021 மதியம் வாக்கில் பலக்கனூத்து ஊராட்சி அலுவலகத்திற்கு வந்து தன்னிடமோ அல்லது ஊராட்சி செயலாளர் லிங்கசாமி வசமோ கொடுக்கும்படி கூறினார். எனது பிளாட்களை விற்க தடையில்லா சான்று பெற ரூ.40,000/-த்தை ஊராட்சி தலைவரிக் கணவர் திரு.ராமசாமி மற்றும் ஊராட்சி செயலாளர் திரு.லிங்கசாமி ஆகியோருக்கு லஞ்சமாக பணம் ரூ.40,000/- கொடுத்து பெற விரும்பவில்லை. நானும் திருமதி.ஈஸ்வரி அவர்களும் சேர்ந்து

பலக்கனூத்து ஊராட்சியில் போட்டுள்ள மேற்படி பிளாட்களை விற்பனை செய்ய தடையில்லா சான்று வழங்க ஏற்பாடு செய்ய லஞ்சமாக பணம் ரூ.40,000/- கேட்ட திரு.இராமசாமி, ஊராட்சி மன்ற தலைவரின் கணவர் மற்றும் திரு.லிங்கசாமி, ஊராட்சி செயலாளர், பலக்கனூத்து ஊராட்சி ஆகியோர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டு இந்த புகாரை கொடுக்கிறேன். மேலும், நகர் ஊரமைப்பு அலுவலகத்தில் இருந்து தலைவர், பலக்கனூத்து ஊராட்சிக்கு அனுப்பப்பட்ட 24.06.2021-ம் தேதியிட்ட கடித நகல் இத்துடன் இணைத்துள்ளேன். மேலும் பலக்கனூத்து ஊராட்சி மன்ற தலைவரின் கணவர் திரு.ராமசாமி மற்றும் ஊராட்சி செயலாளர், திரு.லிங்கசாமி அவர்கள் கேட்ட லஞ்சப்பணம் ரூ.40,000/-ஐ கொண்டுவந்துள்ளேன். நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு, Sd/- xxxxx (M.பாலகார்த்திக், 12.08.2021)

12.08.2021/07.00hrs, Received the Complaint, Inspector Tmt.Rupa Geetharani for necessary action. Sd/-xxxxx (J.Nagarajan, DSP, V&AC, Dindigul 12.08.2021)

Sir, Received the complaint on 12.08.2021 at 08.15 Hrs. A confidential verification has been conducted in respect of the complaint through sources. Complaint was found to be genuine and reputation of the accused was found to be bad. Hence, after getting oral permission from the Superintendent of Police, Southern Range, I am registering a case in Dindigul V&AC Cr.No.04/2021, u/s. 7, 7(A) of P.C Act 1988, as amended by the P.C. (Amendment) Act 2018, on 12.08.2021 at 09.30 hrs and took up investigation. Sd/-xxxxx (J.Rupa Geetharani, Inspector of Police, V&AC, Dindigul 12.08.2021)

Original FIR along with written complaint of Tr.M.Balakarthick, S/o.B.Murugan, Ganabathi Nagar, Puthusathiram (Post), Dindigul District-624619 and with the relevant documents are submitted to the Chief Judicial Magistrate/Special Judge, Dindigul and copy of the FIR is submitted to the Director, Vigilance and Anti Corruption, Chennai.

JRupa 12/08/21

(J.Rupa Geetharani)
Inspector of Police,
Vigilance & Anti-Corruption,
Dindigul.